எந்த முயற்சியும் ஆரம்பத்தில் அற்பமாய் மதிக்கப்படுவது போல மதுவில்க்கு விஷயமாயுற்பத்தியான ஆரம்ப முயற்சியும் அநேகரால் இகழ்ந்து கூறப்பட்டது. குடிவெறி மிகுந்த இங்கிலாந்து முதலிய தேசங்களில் துவக்கத்தில் இம்முயற்சியைப் பழித்துப் பேசாதவரும், நியாய விருத்தமும் ஒருக்காலும் நிறைவேறக்கூடாத அசாத்திய செய்கையுமென்று இதைக் கண்டித்துப் பேசாதவருங் கிடையாது. சத்திய மார்க்க வழிகாட்டிகளென்று சொல்லிக் கொண்ட மதாசாரிகள் முதலாய் மதுவிலக்கு முயற்சியைப் பகைத்துப் பழித்துஇழித்தனர். ஆனால் காலம் எவ்வித ஆச்சரியமான மாறுதலை நடப்பித்திருக்கிறது பாருங்கள். அக்காலத்திலே அநீதியும் அசாத்தியமுமான முயற்சியென்று கருதப்பட்டது இப்போது நீதியும் சாத்தியமுமென்று சிலாகிக்கப்பட்டிருக்கிறது. ஒரு காலத்திலே இதற்கு விரோதமாய் நின்று பகைசாதித்தவர்களி லநேகர், இப்போது இந்த நன் முயற்சிக்காகப் பரிந்து பேசுகிறார்கள். தேசத்துக்கே ஹானியை விளைவிப்பது போலக் கருதப்பட்ட மதுவிலக்கு முயற்சி தற்காலம் தேசத்துக்குச் சொல்லிமுடியாத க்ஷேமத்தை விளைவிப்பதென்று அறியப்பட்டிருக்கிறது. இந்தச் சிறந்த மாறுதலைக் காண நாட்டின் நன்மையை விரும்பியுழைக்கும் யாருக்குத்தான் உள்ளம்பொங்காது? யாருக்குத்தான் இது அளவிறந்த ஆனந்தத்தை யுண்டுபண்ணாது? தற்காலம் உலக முழுமையிலும் மதுவிலக்கு விஷயமாய் நடத்தப்படுகிற ஊக்கமான முயற்சியையும், அதனால் விளைந்து வருகிற அளவில்லாத பலன்களையுஞ் சிறிது கவனித்துப் பார்ப்போமானால் உண்மையாகவே மதுவிலக்கு முயற்சியில் பாடுபடுகிற சகலருடைய இருதயமும் பொங்கி மகிழும்படியாயிருக்கிறது. உலகத்தில் சகல கண்டங்களிலும்மதுவிலக்குமுயற்சிதீவிரகதியாய் நடைபெற்று வருகிறது. ஆயிரக் கணக்கான சங்கங்களும், கோடிக்கணக்கான பரோபகாரிகளும் இந்நன்முயற்சிக்காகத் தங்களைப் பிரதிஷ்டைப்பண்ணி யுழைத்துவருகிறார்கள். அவர்களாலே கடந்த சொற்ப காலத்துள் உலக முழுமையிலுமே விசேஷித்த நன்மைகள் விளைந்திருக்கின்றன. அவ்விதம் விளைந்திருக்கிறதும் விளைந்து வருகிறதுமான நன்மைகளை நாமிங்கு விவரித்துக்காட்டுதல் சாத்தியமாகாது. என்றாலும் பல தேசத்து மதுவிலக்குச் சங்கங்களின் அறிக்கைப் பத்திரங்களின்படி ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா ஆகிய கண்டங்களிலும், மற்றுந் தீவு தீவாந்தரங்களிலும் மதுவிலக்கு முயற்சியால் உண்டுபட்டிருக்கிற அனுகூலங்களைச் சுருக்கமா யீண்டெடுத்துக் கூற விரும்புகிறோம். ஐரோப்பாவிலே மதுவிலக்கு முயற்சியால் உண்டாயிருக்கிற சாதகங்கள் அதிசயமானது. கடந்த சிலவருஷகாலத்தில் இவ்வளவு பெரிய மாறுதல்கள் நடந்தேறக்கூடுமென்று ஒருவரும் நினைக்கவில்லை· பின்லாண்டில் குடியைத் தடுக்கும் சட்டம் செய்

யப்பட்டுக்கடுமையாய் அமுல் நடத்தப்பட்டு வருகிறது. டென்மார்க்குக்குச்சொந்தமான பேரோ தீவுகளில் சாராய வியாபாரமே நடக்கக்கூடாதெனத் தடைசெய்யப்பட்டிருக்கிறது. ஸ்வீடனில் குடியைத் தடுக்கும் சட்டம் சமீபத்திலே அமுலுக்குவந்திருக்கிறது. 1907-ல் ஸ்டாக்கோம் நகரில் மதுவிலக்கு மகாசங்கமொன்று நடத்தப்பட்டதும், அதற்கு உலகமெங்குமிருந்து 1200 பிரதிநிதிகள் சென்று மதுபானத்தின் சீர்கேடுகளை யெடுத்துப் பேசினதும் அநேகருக்குத் தெரிந்திருக்கலாம். இந்த மகா சங்கத்தில் ஸ்வீடன் நாட்டுப் பட்டத்து இளவரசனே தலைமை வகித்திருந்தார். ஐஸ்லாண்டில் சாராயம் வடிக்கக்கூடாதென்று வெகு நாளைக்கு முன்னே சட்டஞ்செய்யப்பட்டிருந்தாலும் 1908-ல் சாராயவிற்பனையே நடக்கக்கூடா தென்று தடுக்கப்பட்டுப்போனது. ஸ்பெய்னில் ஞாயிற்றுக்கிழமைகளில் சாராயம் விற்கப்படக் கூடாதெனச் சட்ட முண்டாயிருக்கிறது. ஜெர்மனியிலும் இவ்வித முயற்சி நடந்தேறி வருகிறது. நார்வேயில் அரைவாசிப் பட்டணங்களில் சாராய விற்பனை தடுக்கப்பட்டிருக்கிறது. பெல்ஜியம் சுவிட்சர்லாந்து இவைகளில் சாராயம் இறக்குமதியாகக் கூடாதெனத் தடுக்கப்பட்டிருக்கிறது. இப்படியே ஐரோப்பா முழுமையிலும் மதுவிலக்கு விஷயத்தில் அரசாங்கங்களே விசேஷித்த அக்கரை காட்டுகின்றன. கிரேட் பிரிட்டனிலும் ஐர்லாந்திலும் இவ்வித பலமான மாறுதல்க ளில்லாவிட்டாலும் பலமான மாறுதல்கள் நடக்கக் காலம் நெருங்கி யிருக்கிறது. பல வழியிலும் அங்கே ஊக்கமான முயற்சிகள் நிறைவேறி வருகின்றன. நிற்க, ஆசியாவை யெடுத்துக் கொண்டால், இந்தக் கண்டத்திலும் சிறந்த மாறுதல்களுக்கு அறிகுறியிருக்கிறது. சீனாவில் அபினி வியாபாரத்தை அந்தக் கவர்ன்மெண்டார் தொலைத்தது எவ்வளவு சிறந்த காரியம்! பத்துவருஷத்துள் இந்த மகத்தான சீர்திருத்தம் அந்நாட்டில் நடந்திருக்கிறது. இந்தியா, ஜப்பான், பெர்ஷியா இந்நாடுகளில் அரசாங்கத்தார், மதுபான வியாபாரத்தை அடியோடே தொலைப்பதற்கான பலத்த ஏற்பாடுகள் செய்யப் பின்வாங்கியிருந்த போதிலும், மதுவிலக்குச் சங்கங்கள் அதற்காகப் போராடி வருகின்றன. அற்ப சொற்ப அனுகூலங்கள் அப்போதைக்கப்போது நடந்தேறுகின்றன. ஆபிரிக்கா கண்டத்தைக் கவனித்தால், அங்குள்ள பிரஜைகள் அநாகரிகர்களும் அறிவில்லாவர்களுமாயிருப்பினும் அவர்களுக்குள்ளுங்கூட மதுவிலக்கு முயற்சி நடைபெறுகிறது. சாராயவிற்பனையால் பணத்தைச் சம்பாதிக்கும் ஐரோப்பியரின் மிதமிஞ்சின ஊக்கத்தால் அந்தக் கண்டத்தில் மதுவிலக்கு முயற்சிக்கு இடையூறுண்டாயிருந்தாலும் அநேகபாகங்களில் குடிவெறியோடு கொடும்போர் நடந்துவருகிறது. காங்கோ ப்ரீஸ்டேட் கவர்ன்மெண்டார் தங்களைச்சேர்ந்த நாடுகள் முழுவதும் மதுவருந்துதலை யொழிக்கப் பிரயத்தனஞ் செய்கிறார்கள். கேப் காலனியில் அரசாங்கத்தார் பொறுப்பிலேயே சாராயக் குத்தகையெடுக்கும் நோக்கமிருந்ததை மதுவிலக்குச் சங்கத்தார் வாதிட்டு அந்த ஏற்பாட்டை ரத்து செய்துவிட்டார்கள். இவ்வாறே அமெரிக்காவைக் கவனித்தால் அந்தக் கண்டத்திலும் விசேஷித்த மாறுதல்கள் நடந்தேறியிருக்கின்றன. ஐக்கிய மாகாணங்களில் அதிகாரிகள் சட்டஞ் செய்திருப்பதால் சுமார் 8 மாகாணங்களில் சாராய விற்பனையை நிறுத்தி விட்டார்கள். அநேக பட்டணங்களில் மதுவிலக்கு விஷயத்தில் ஜனங்களுக்கு விசேஷித்த ஊக்க முண்டாயிருக்கிறது. உத்தேசம் 8 கோடியே 50 லக்ஷம் ஜனங்களில் 4 கோடிஜனங்கள் குடியில்லாமலிருக்கிறார்களென்று கணிக்கப்படுகிறது. கனடா, மெக்ஸிகோ, மத்திய அமெரிக்கா, வெஸ்ட் இந்தீஸ், தென்னமெரிக்கா இவ்விடங்களிலெல்லாம் சாராயவிற்பனை தடுக்கப்பட்டிருகிறது. இவை தவிர ஆஸ்ட்ரேலியா, நியூஜீலண்ட், தென் சமுத்திர தீவுகளாகிய இவைகளிலெல்லாம் மதுவிலக்கு முயற்சி மும்முரமாய் நடந்துவருகிறது. இந்தவிதமாக நாம் கவனித்தால் உலகமுழுமையிலும் மதுபானத்துக்கு விரோதமானபோர் ஆரம்பமாகி மகா மும்முரமாய் நடந்து வருகிறதென்பதைக் காணலாம். இந்தப் போர் நாளுக்கு நாள் அதிகரித்து, குடி வெறியென்னும் சத்துராதி அடியோடே அழிந்துபோமட்டும் இடையறாது நடக்கு மென்று நம்புகிறோம். இது விஷயத்திலே அக்கரையுள்ளவர்களெல்லாரும் இந்த நற்செய்தியையறிந்து சந்துஷ்டி கொள்ளுவதுடன், இதற்காகத் தங்களாலானமட்டும் உழைக்க முற்பட வேண்டும்.

நசரையார் சதகம் :—ஆண்டவருடைய அருண் மொழிகளின்மேல் நூறு விருத்தங்களடங்கியது. இப்பத்திரிகை தமிழ் எடிடரிடங்கிடைக்கும். ஒரு அணா லேபில் அனுப்பிப் பெற்றுக்கொள்க.

Alcohol and its effects upon our body.

மதுவும், அது நமது சரீரத்திற் செய்யும் பலனும்.

மதுபானம் அருந்துவதினலே தேகத்திடனற்றவர் தேகத்திடனையும், உற்சாகமூக்கமில்லாதவர் உற்சாகமூக்கமுதலியவற்றையும், சித்த விகாரமடைந்தவர் சொஸ்த புத்தி, புத்தி தீக்ஷண்ய மிவைகளையும், சோர்பு மனத்துயர் உள்ளவர் சுறுசுறுப்பு குதூஹலம் முதலியவைகளையும் பெற்றுக்கொள்ளுகிறார்களென்று சிலர் வாதிக்கிறார்கள். இந்தவித எண்ணமே அநேகரை மதுபானமென்னுங் கொடிய சத்துருவின் கையில் அடிமைகளாக்கி வைத்திருக்கிறது. ஆனால் இவர்களுடைய வாதம் சரியா? மதுபானம் மேற்கூடிய சுகுணங்களை யுண்டு பண்ணுவதாகச் சொல்லுகிறார்களே அது உண்மைதானா? அதை நியாயவாயிலாய்ச் சோதித்துப் பார்ப்பது அறிவாளிக்களுக் கழக்காகும். ஏனெனில் மதுபானம் பிரத்தியக்ஷமாக நடத்தியிருப்பது உற்பாதமேயன்றி வேறில்லை. தேசத்திலே அநர்த்தத்தையும், வறுமையையும், கொடிய ரோகங்களையுந்தான் விளைத்திருக்கிறது. அப்படியிருக்க அதிலே பல சுகிர்தமிருக்கிறதென்று அதை ஆசையாய் நேசித்து அருந்துவோர் கூறுவதில் எவ்வளவு தூரம் உண்மையிருக்கிறதென்று ஆராய்ந்தறிவது நியாயமும் நன்மையுமாகும். எனவே இதுவிஷயத்தில் போதுமான அறிவும், அநேக கால ஆராய்ச்சியினால் தங்களுடைய அபிப்பிராயம் மறுக்கப்படாத அபிப்பிராய மென எடுத்துக்காட்டுந் தீரமுமுடைய பலபண்டிதர்களுடைய நியாய வாதங்களை யீண்டெடுத்துக் கூறுதல் தகுதியாகுமென்றெண்ணுகிறோம். மதுபானம் மானிட சரீரத்துக்கு அனுகூலமான யாதொரு பலனையுண்டாக்குகிறதற்குப் பதிலாக பிரதிகூலமும் மோசகரமுமான பல தீக்குணங்களை யுண்டாக்குகிறதென்று ஆராய்ச்சி செய்தறிந்த பண்டிதர்களெல்லாரும் ஏகவாக்காய் சாக்ஷி பகருகிறார்கள். அவர்களெடுத்துக் காட்டியிருக்கிறபடி மதுபானம் நமது சரீரத்திற் செய்யும் சில பலனைக் குறிப்பிடுகிறோம்:—

1. மதுபானம் மூளையைக் கெடுக்கிறது:—மதுபானம் மூளையின் கிரியையைத் தீவிரப்படுத்தக்கூடிய வஸ்துக்களில் சிரேஷ்டமானது என்றாலும், அதனுடைய மட்டுக்கு மிஞ்சின தீவிர சக்தி மூளையின் சுதாவான கிரியையைக் கெடுத்துப்போடுகிறது. மூளைக்கும் மற்ற உறுப்புகளுக்குமிருக்கிற சம்பந்தத்தின் ஒழுங்கைக் கலங்கடித்து, சித்த விகாரத்தை யுண்டு பண்ணுகிறது. இதைக் குடிகார னொருவனிடத்திலே நாம் பார்க்கலாம். அவன் குடியாமல் தெளிந்த புத்தியுள்ளவனாயிருக்கையில் புத்தியீனமாயுளர வெட்கப்படுகிறவனாயிருக்க, குடித்த பிறகு மகா மதியீனமான பேச்சும், பிள்ளைத்தனமான உளருதலு முடையவனாயிருக்கப்பார்க்கிறோம்.

2. மதுபானம் இரத்தத்தைக் கெடுக்கிறது:—இரத்தத்திலே ஜீவளர்ச்சிக்கேதுவான பிராணவாயும் கரிவாயுமிருக்கிறது. இந்த இரண்டு வாயுவின் கிரியையும் மதுபானம் அழிக்கிறது. இதனால் நரம்புகளின் இரத்த விர்த்திச் சக்தியை அற்றுப்போகச்செய்கிறது. அன்றியும் சுகமுள்ள தேகத்திலுள்ள இரத்தத்தில் ஒருபங்கு ஜலமுமிருக்கிறது. அந்த ஜலத்தையும் மதுபானம் பீடித்துவிடுகிறது. இந்த விதமாய் ஜீவாதாரமான உதிரத்தையே மதுபானம் அழிக்கிறது.

3. மதுபானம் இருதயத் திடனை நீக்குகிறது:—வியாதிகாரணமாய்ப் பலக்ஷயம் நேரிடும்போது மதுபானம் உட்செலுத்தப்பட்டால் வியாதியஸ்தரின் இருதயம் கொஞ்சம் பலங்கொண்டு அவர்களைச் சீக்கிரத்தில் மடிந்துபோக வொட்டாதபடி தடுக்கிறதாக அறியப்பட்டிருக்கிறது. என்றாலும் இந்த எத்தனத்தில் மோசமிருக்கிறது. ஏனெனில் மதுபானம் இருதயத்தில் மட்டுக்கு மிஞ்சின கிரியை செய்கிறது. அது அளவுக்குமிஞ்சி இருதயத்துடிப்பை அதிகப்படுத்துகிறபடியால் மானிட சரீரத்துக்கு எப்போதுங் கெடுதியையே செய்கிறது. மாமிச சத்தை மதுபானத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தபோது, மதுபானத்திலும் மாமிச சத்தே சிரேஷ்டமெனக் கண்டுபிடிக்கப்பட்டது. மதுபானமருந்துவோர் சீக்கிரத்தில் தளர்ச்சியடைய, மாமிச சத்து உட்கொள்ளுவோர் அப்படி தளர்ச்சியடைவதில்லை. மதுபானம் இருதயத்தையும் நாம்புகளையுந் துர்ப்பலப்படுத்துகிறது.

4. மதுபானம் ஈரலைக் கெடுக்கிறது:—மரண சோதனையின்போது பொதுவாக வைத்திய நிபுணர்களால் கண்டுபிடிக்கப்படுகிற விஷயம் குடிகாரரின் ஈரல் அதிகமாய்க் கெட்டுப்போயிருப்பதுதான். ஈரல் குடிப்பழக்கத்தால் நெருக்கப்பட்டுக் கட்டி

யாய் விடுகிறது. இந்நாட்டில் குடிகாரருடைய ஈரலிலெல்லாம் ஒருவித வியாதியிருப்பதாக அறியப்பட்டிருக்கிறது. எல்லா உறுப்புகளையும் விட ஈரல் குடியால் வெகு சீக்கிரம் கெட்டுப்போகிறது.

இப்படியாக மூளை, இரத்தம், இருதயம், ஈரல் இவையாவும் குடியால் நாசமாவதோடு, நுரையீரல், குடல், மண்ணீரல், சுற்றுக் குடல் இவையனைத்தும் குடியால் அநர்த்தமாகிறதென்றும், மதுபானம் கெடுதிசெய்யாத மானிட உறுப்பு ஒன்றாவது இல்லையென்றும் தேர்ந்த அனுபவசாலிகள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நரம்பினிடத்திலே மதுபானம் பலன் செய்வதைப் பற்றி அதிகமாய் எச்சரித்து இடித்துரைக்கிறார்கள். மதுபான முட்கொள்ளுபவன் அதினாலே தனக்கு தீக்ஷண்ய புத்தியும், சுறுசுறுப்பும், தேகத்திடனும் உண்டாகிறதென்று பெருமைப்பாராட்டிக்கொள்ளலாம்; ஆனால் இந்த தீவிரபுத்தி, தேகத்திடன், சுறுசுறுப்பு யாவும் சற்றுநேரமிருந்து பிறகு பிணத்தைப் போலாக்கி விடுகிறதே அதற்குக் காரணமென்ன வென்று அவன் சற்று யோசித்தால் நலமாயிருக்கும். மதுபானம் நரம்புகளுக்கு மட்டுக்கு மிஞ்சி தீவிரகதியை யுண்டாக்கிப் பிறகு அதன் சொந்த சத்தைக் கெடுத்து தேகத்தையே துர்ப்பலமாக்கி விடுகிறதுதான் காரணம். இந்த விதமாய் மதுபானம் நமது சரீரத்துக்குச் செய்யும் கேட்டையறிந்து அதைக் கொடிய சத்துருவாக எண்ணி அப்புறப்படுத்துவது சொஸ்த புத்தியுள்ள எல்லார் மீதும் விழுந்த கடமை.

The Evil of Tabacco Habit.
புகையிலையின் தீமை.

தற்காலம் ஐரோப்பிய தேசங்களில் மதுவைப்போலவே புகையிலையும் ஜனங்களால் மிதமிஞ்சிக் கையாடப்பட்டு வருகிறது. இதனால் விளைகிற தீமைகள் பயங்கரமாயிருக்கிறபடியால் வைத்திய சாஸ்திரிகளும், பரோபகாரிகளும், இது விஷயத்தில் விசேஷ கவனஞ்செலுத்திப் புகையிலையிலேயிருக்கிற சாதகபாதகங்களைக் கண்டுபிடித்து அறிவித்துவருகிறார்கள். ஐரோப்பாவில் மட்டுமென்று; இந்தியாவில் புகையிலைப் பழக்கம் எவ்வளவு கொடிதாயிருக்கிற தென்பதை நாம் இங்கு எடுத்துக் கூற வேண்டியதில்லை. இந் நாட்டில் ஸ்திரீகளும் பிள்ளைகளுங்கூட இந்த துர்ப்பழக்கத்துக்கு அடிமைகளாயிருக்கிறார்கள். இத்தேசத்து ஸ்திரீகள் இந்தத் தீயபழக்கத்துக் குட்பட்டிருப்பது போலவேறெத் தேசத்திலுமில்லை யென்று சொல்லப்படுகிறது. சுருட்டுகுடித்தல், சிகாற்று குடித்தல், புகையிலையடக்கல், பொடிபோடுதலாகிய இப்பழக்கங்கள் அவலக்ஷணமும், அசுத்தமும், துர்க்கந்தமுமான துர்ப்பழக்கங்களாயிருந்தாலும் இந்நாட்டில் மேல் குலத்தார் முதல் தாழ்குலத்தார் வரையில் இவைகளுக் கடிமைப்பட்டிருக்கிறார்கள். வட இந்தியாவில் மிகவும் கண்ணியமும் அந்தஸ்துமுடைய குலமாதர்கள் பகிரங்கமாய் உக்காகுடிப்பது சகஜமாயிருக்கிறது. தென்னாட்டிலும ஸ்திரீ பிள்ளைகள் முதலாய், சுருட்டு சிகாற்று குடிப்பதும், வாயில் புகையிலையடக்குவதும் பொடி போடுவதும் வெகு சகஜமாய்ப் போய்விட்டது. இந்தியர் சுத்தமாயிருத்தலை ஆசிக்கிற ஜனங்களாயிருக்க அவர்கள், துர்க்கந்தம் வீசும்படியான புகையிலைப் பழக்கத்துக் குட்பட்டுத் தங்களை அசுசிப்படுத்திக்கொள்ளுவது எவ்வளவு பரிதாபமென்றும், தங்களுடைய சாப்பாட்டைக் கீழ்ஜாதியார் தொடப்படாதென்று அவ்வளவு கவனமாயிருக்கிற இவர்கள், பெரும்பாலும் வீதிகளிலெறிந்து விடப்படுகிற எச்சிற்சுருட்டுகளினால் செய்யப்படுகிற சிகாற்றுகளையுட்கொள்ளுவது எவ்வளவுகேவலமென்றும் ஒரு ஐரோப்பியமாது எழுதியிருக்கிறாள். சிலதுர்ப்பழக்கங்கள் மனிதரைப் பிடித்துக் கொள்ளும்போது, எவ்வளவு ஈனச் செய்கையாயிருப்பினும் அதை மனங்கூசாமற் செய்யும்படி அப்பழக்கங்கள் செய்து விடுகிற தல்லவா? இது என்னபரிதாபம்! புகையிலையிலே யிருக்கிற தீமையை ஒருவன் நன்குணர்ந்தால் அதை மீண்டுந்தன் கையால் தொடச் சம்மதிக்கமாட்டான். அதன் கேடுபாட்டை யுணராமலே அநேகர் அக்கொடிய சத்துருவன் அடிமைகளாயிருக்கிறார்கள். ஆகையால் புகையிலையிலேயிருக்கிற சிலமுக்கிய துர்க்குணங்களைச் சுருக்கி யெழுதகிறோம்.

1. புகையிலை சுகத்துக்குப் பிரதிகூலமானது:—வல்லவரான வைத்திய சாஸ்திரப் பண்டிதர்கள் புகையிலை சுகத்துக்குப் பிரதிகூலமான தென்றும். பலவியாதிகளையுற்பத்தி செய்யக்கூடிய தென்றுஞ் சொல்லுகிறார்கள். புகையிலையில் மகாகொடிய விஷத்தன்மை யுண்டென்றும், அது நூற்றுக்கு 20 பங்கு அதிலுண்டென்றும் ஸ்கோல்ஸ் பண்டிதர் கூறுகிறார் இந்த விஷம்

ஞ்சுக்களிலெல்லாம் கொடிதென்றும், ஒரு ஆளைக்கொல்ல கொஞ்ச மாத்திரமே போதுமென்றும் எடுத்துக் காட்டியிருக்கிறார். ஒருதுளிவிஷம் ஒரு பூனையைக் கொல்லக்கூடியதாம். ஒரு பவுண்ட் நிறையுள்ள விஷம் 100 பேரைக்கொல்லுமாம். புகையிலையுபயோகிக்கிறவர்களுக்கு அது உடனே தீமை செய்யக்கூடாததாயிருந்த போதிலும், சரீரத்திலே கொஞ்சங் கொஞ்சமாய்ச் சேர்ந்து பிற்காலத்தில் தீமையையுண்டு பண்ணுகிறது. புகையிலை விஷம் இரத்தத்திற்போய்க் கலந்து விடுகிறது. ஒரு ஸ்திரீ அதிக பலக்ஷயமடைந்து சாகிறதருணத்திலிருந்தாள். கொஞ்சம் புதிய உதிரத்தை அவள் சரீரத்துள் புகட்டினால் அவள்பிழைக்கக் கூடுமென்று வைத்தியர் சொன்னார். அவளுடைய குமாரன் தன் இரத்தத்தைக் கொஞ்சம் தன் தாயின் தேகத்தில் செலுத்தும்படி உடன் பட்டு முன்வந்தான். அந்தப்படி பண்டிதர் செய்தார். தாய் பிழைத்துக்கொண்டாள். ஆனால் அவளுக்குப் புதிய உயிர்வந்தவுடனே "என் வாயில் புகையிலை உருசியுண்டாகிறது" என்று சொன்னாள். அந்த வாலிபன் பேர் பெற்ற புகையிலைக் குடியனும். அவன் இரத்தம் புகையிலை விஷத்தால் மிஸ்ரமித்திருந்தது.

2. **புகையிலை தேக வளர்ச்சிக்குப் பிரதி கூலமானது**:—புகையிலை மதுவைப் பார்க்கிலும் சற்றுக் குறைவாய் மஸ்துண்டாக்கக்கூடியதாயினும், அது உள்ளுக்குள்ளே மறைந்து கிடந்து தீமையையுற்பத்தி செய்யக் கூடியதாகையால் மகா மோசகரமானதென்று வைத்திய சாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். அது தேகவளர்ச்சியைத்தடுக்கிறது. சரீரம் பலப்படாதபடி செய்கிறது. இதனாலேயே பல தேசங்களில், வளரக்கூடிய பாலியர்கள் புகையிலைப்பழக்கத்தைக் கையாடாதபடி சட்டங்கள் விதிக்கப்பட்டிக்கின்றன. பிரான்ஸிலும், சுவிட்சர்லாந்திலும் 16 வயதுக்குக் கீழ்பட்ட பையன்கள் புகையிலை யுபயோகிக்கக் கூடாதென்று சட்ட மேற்பட்டிருக்கிறது. மற்றத் தேசங்களிலும் இவ்வித விதிகளையுண்டு பண்ண முயற்சி செய்யப்பட்டுவருகிறது. பிரான்ஸிலும், அமெரிக்காவிலும் யுத்தகப்பல் சாஸ்திர பயிற்சி செய்வோர் புகையிலை யுட்கொள்ளக்கூடாதெனத் தடுக்கப் பட்டிருக்கிறது. நமது நாட்டில் ஐக்கிய மாகாணங்களில் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் பிள்ளைகளுக்கு சிகாற்று விற்கப்படாதென புதிய சட்ட மொன்று சமீபத்தில் உண்டாக்கப்பட்டிருக்கிறது.

[இன்னும்வரும்]

The Ignorance of Drunkards.
குடியர் மதிமயக்கு.

இம்மையிலுறும் மாந்தரின் தன்மையைச் சற்றுப் பரியாலோசிக்கின், நல்ல மரத்திற் புல்லுருவி பாய்ந்தது போன்று அறிவுக்கு ஆதாரமாகிய மூளைக்கு நஷ்டத்தையுண்டாக்கும் மதுபான முதலிய மயக்க வஸ்துக்களை விரும்புதல் மதிமயக்காகும். இதுவே குடியர் மதிமயக்கு. இந்தியராகிய நமது முன்னோர்கள் வேதகாலத்தில், "சோம பானம்" என்னும் ஓர் வகை மயக்க வஸ்துவைக்குடித்து வெறிகொண்டாடினர். இவ்விதம் செய்துவந்தவர்கள் தேவர் என்றழைக்கப்பட்டார்கள். தேவரையும் மயக்கியது மதுபானமன்றோ! தெங்கு, பனை, ஈச்சன் முதலிய விருக்கங்களினின்றெடுக்கப்படுகின்ற கள்ளில் இயற்கையாகவே ஓர் வித மயக்கத்தைத் தரும் நஞ்சு கலந்தேயிருக்கின்றது. சாராயவகையிலும் இவ்வண்ணமேயிருக்கின்றது. இவ்வித கொடிய வஸ்துவை உள்ளங்குளிர உட்கொள்ள ஆசித்துக் குடிப்பதே குடியர் மதிமயக்கு.

நமது பெரியோர்கள் கள்ளருந்தல் பஞ்சமகா பாதகத்தி லொன்றென அதைக் கண்டித்துள்ளார். இதனால், குடிக்கும் பழக்கமானது நாட்டிற்குக் கேட்டையும் வீட்டிற்கு நாசத்தையுங் கொணர்ந்து இல்லறத்தானை ஒட்டாண்டியாக்கிக் கூத்தாட்டங் கொள்வதாம். இத்துர்ப்பழக்கத்தை நம்மாலானமட்டும் சிரமமெடுத் தோட்டாவிடின், குடியர் மதிமயக்கு மிஞ்சுமேயொழிய எஞ்சாது. கள்ளில் பிரியங்கொண்ட கட்குடியர், வெள்ளை மனிதரின் பலவகை சாராயங் குடித்துச் சாலவுளங்களிக்கின்றார். தலைகுறை கமலத்தைச் சாரும் ஈக்கட்போன்றுமதுக்கடை சார்ந்து மாழ்குவர் குடியர். இவ்வித சிகிர்த்திகளுக்காளாவார் நன்னெறியைக் கைவிட்ட மயக்குற்ற வெறியரே! கள்ளும் சாராயமும் கடவுள்படைப்பா? அன்று. மனிதன் தன்புலன் மயக்குற்றுநிற்க, அதிலேதோ ஓர்நவீன சுகமிருப்பதாய் எண்ணிய மனோபாவத்தான் செய்துகொண்டதே யொழிய வேறன்று. மனிதன் சிறிது உற்சாகமடைய செய்துகொண்டவை பெரிதும் அவனுக்கே கேடாக முடிகிறது. சனியனைவிலக்கு

வாங்குவதைப்போல, கள்ளைக் குடித்துக் கனமிழப்பர் சாராயம் குடித்துச் சத்தற்றுப் போவர். இதுமட்டோ! குடியருக்கு குன்மம், குலநோய், க்ஷயம், அப்ஸ்மாரம், அங்கவிகிர்த்தி, வீரியக்குறைவு, பயித்தியம், மலடு, சித்தபிரமை, முதலிய ரோகங்களுண்டாகின்றன. இக்குடியால் அநேகர் திருட்டு, வழிபறி, விபசாரம், கொலைமுதலிய குற்றங்களைச் செய்து நியாயத்தலங்களில் விசாரிக்கப்பட்டுக் கடுஞ்சிறையடைவதுமன்றி ஜீவபரியந்தம் தீவாந்திரங்களில் இருக்கத் தண்டனையும்பெறுகின்றார். இவையனைத்தும் மதுவையுண்டதாலுண்டான மதிமயக்கன்றோ!

ஊத்தை நாற்ற முடையது கள்ளாம். இந்தக்கள் மாத்திலிருந்து குடுவையில் இறங்கும்போது அதில், செத்துக்கிடக்கும் செந்துக்கள் ஈ, எறும்பு, பல்லி, அறணை, தேள் முதலியன. மலத்தையும் பிணத்தையும் புசித்துவரும் காக்கையும் குடுவையில் வாய் வைத்துச் சுவைக்கின்றது. குருவிமுதலியன குடுவையிலுள்ள கள்ளைக் குடித்து அக்கள்ளில் எச்சத்தை விடுகிறது. இங்ஙனமாக, அசுத்தப்பட்ட கள்ளை அஞ்சாமற் குடித்து ஆனந்தங்கொள்வது குடியரின் மதிமயக்கே! இந்தக்கள்ளு, சாராயக் குடியால் மாந்தருக்கு ஏதாவது பயனுண்டா? சுகமுண்டா? பிறருக்கு நலமுண்டா? ஒன்றுமே இல்லை! ஆனால், இக்குடியானது புத்திக்கு மயக்காகவும், ஆன்மாவுக்கு அலகையாகவும், பணப்பைக்குச திருடனாகவும் பிச்சையெடுப்பதற்கு வழிகாட்டியாகவும், மகா கேடாகவும், அருமை மனைவிக்கு வியாகுலமாகவும், பெற்றப்பிள்ளைகளுக்கு மாறாத சஞ்சலமாகவுமிருக்கிறது. இப்படிப்பட்ட விஷயங்களையெல்லாம் நன்குணர்ந்த மாந்தர் ஈண்டு மதுவையுண்டு கெடாமல் மதுவிலக்கஞ் செய்வாராயின், மகிதல மீது மனங்களித்து வாழ்வர். அங்ஙனமின்றித் திரும்பவும் கட் சாராயங் குடிக்கத்தலைப்படின், இச்செய்கைதான் சாகமருந்துண்பானை யொக்குமன்றோ! மதிவல்லீர் இதனை ஆய்ந்துணர்ந்து பார்மின்! பார்மின்!!

புதுவை. அடைக்கலநாதப்பிள்ளை.

News and Notes.
சமாசாரக் குறிப்புகள்.

காலேஜ் மாணக்கர் செய்யும் ஊழியம்:—லாஹோர் அமெரிக்கன் பிரெஸ்பிடேரியன் காலேஜ் மாணக்கர் தங்களுடைய ரஜாகாலத்தில் வெகு பிரயோஜனமான ஊழியஞ் செய்து வருகிறார்கள். அவர்களில் 200 பேர் போல ஒன்றுசேர்ந்து அநேக கிராமங்களுக்குப் போய் உபயோகமான நல்ல புஸ்தகங்களை ஜனங்களுக்குப் பங்கிடுகிறதும், குடும்பங்களிலே போய் அவர்களுக்குப் போதனையான விஷயங்களைச் சொல்லுகிறதும், பிரசங்கங்கள் செய்கிறதும், குவைனா முதலிய மருந்துகளை கொடுக்கிறதும், சுகாதாரத்தைப் பற்றி பேசிக் கிராமங்களைச் சுசியாய்வைக்கச் செய்கிறதும், பிள்ளைகளுக்கு ஆட்டங்கள் முதலியன கற்பிக்கிறதுமான இப்படிப்பட்ட பெருத்த பிரயோஜனமான வேலைகளைச்செய்துவருகிறார்கள். அங்கங்குமுள்ள மாணக்கர் இந்த மாதிரியைப் பின்பற்றினால் நன்றாயிருக்கும்.

தபால் இலாகாவில் பெரிய உத்தியோகம்:—சென்னை போஸ்ட் மாஸ்டர் ஜெனரலுக்கு சீனியர் பெர்ஸனல் அஸிஸ்டண்டாயிருந்த மிஸ்டர் K. வைத்தியலிங்கம் பிள்ளைக்கு, இதுகாறும் இந்தியர் யாருக்குங்கொடுக்கப்படாத பெரிய உத்தியோகங் கொடுக்கப்பட்டிருக்கிறது. டிப்டி போஸ்ட் மாஸ்டர் ஜெனரலாயிருந்த மிஸ்டர் H. L. டன்கன் ரஜா வெடுத்துக் கொண்டமையால் அவருடைய உத்தியோகம் மிஸ்டர் வைத்தியலிங்கம் பிள்ளைக்கு ஆக்டிங்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற 23 வருஷகாலமாய் இந்த இலாகாவில் நம்பிக்கை யுண்டாகும்படி உழைத்த இவருக்கு இப்பதவிகிடைத்தது சிலாகிக்கப்பட்டதக்க விஷயமேயாகும். இக்காலத்திலே இந்தியரிடத்தில் நம்பிக்கைக்குரிய பெரிய உத்தியோகங்களை ஒப்புவிக்கலாமென்கிற எண்ணம் ஆளுவோருக்குண்டாயிருப்பதற்காகச் சந்தோஷப்படுகிறோம்.

மதுபானம் வடிக்கக் கற்பிக்கும் பாடசாலை:—மேல் நாடுகளில் மதுபானங்கள் வடிக்கப்படும் முறைகளையனுசரித்து இந்நாட்டிலும் மதுபானம் வடிக்கப் பயிற்றுவிக்கும் பாடசாலையொன்றை கவர்ன்மென்டார் இச்சென்னையில் அமைத்திருக்கிறார்கள். அது அப்காரி டிப்டி கமிஷனரின் மேற்பார்வையின் கீழ்இருக்கும். மதுபானங்கள் வடிக்கும் சாலைகளில் வேலை செய்வோருக்கு அவசியமாய்த் தெரிந்திருக்க வேண்டிய விஷயங்கள் ஆறுண்டாம். அந்த ஆறு விஷயங்களிலும் பாடங்கள் சொல்லி வைக்கப்படுமாம். மேல் நாட்டு முறைகளையனுசரித்து மதுபானங்கள் வடிப்பதில்

நிபுணர் ஒருவரை கவர்ன்மென்டார் புதிதாய் நியமித்திருக்கிறார்கள். அவர் இப்போதைக்கு மேல் வங்காளத்திலும் கீழ் வங்காளத்திலுமுள்ள மதுபானம் வடிக்கும் சாலைகளை மேற்பார்வை பார்த்து வருவார். சென்னையில் ஸ்தாபித்திருக்கும் பள்ளிக்கூடத்தில் வாசிக்க வங்காள கவர்ன்மெண்டார் 8 பேரை அனுப்புகிறார்கள். அவர்கள் 8 பேரும் அந்த மாகாணத்து சிவில் சர்விஸைச் சேர்ந்தவர்கள். அவர்கள் கூடிய சீக்கிரத்தில் கல்கட்டாவை விட்டு சென்னைக்குப் புறப்பட்டு வருவார்களென ப்படுகிறது. சாராயம் வடிக்கக் கற்பிக்கும் கவர்ன்மெண்டார் அதை விலக்க என்னமுயற்சி செய்யப் போகிறார்கள்?

இந்தியன் நாஷனல் காங்கிரஸ்;—டிசம்பர் மீ கடைசியில் லாகூரில் இந்தியன் நாஷனல் காங்கிரஸ் கூடினது. இதற்குப் பாம்பே வாசி சர் பெரோஸ்ஷா மேடா அக்ராசனாதிபதியாய் நியமிக்கப்பட்டிருந்தார். இவர் வங்காளிகளின் அடத்தைச் சகிக்காமல் தமது நியமனத்தை இராஜினாமா செய்துவிட்டதால் அலகபாத்து வாசி பண்டித மதன மோஹன மாளவியா தலைமை வகித்தார். இந்தக் காங்கிரஸ் அவ்வளவு சிறப்பாய் நடக்கவில்லையென்றே சொல்ல வேண்டும். ஏனெனில் டெலிகேட்டுகள் வெகு சொற்பமாய்ப்போயிருந்தார்கள். சூரத் துக்கலகத்துக்குப் பிந்தி, அமிதவாதிகளைச் சேர்க்காமல் மிதவாதிகளே காங்கிரஸை நடத்தத் தீர்மானித்துச் சென்னையில் அப்படியே நடத்தினார்கள் இப்படியிருக்க இடையில் அமிதவாதிகளையும் இதில் சேர்க்கும் எத்தனமொன்று சிலரால் நடந்தபடியால் இராஜவிசுவாசிகளான பெரும்பாலார் இந்தக்காங்கிரஸ் கூட்டத்துக்குப்போகவில்லைபோல் தோன்றுகிறது.

குடியன் கழுத்தையறுத்துக்கொண்டது: லண்டன் மார்க்கெட்தெருவில் தாமஸ் டேவிஸ் என்கிற தொழிலாளி அக்டோபர் மீ 29 உ யிரவு தன் படுக்கையில் கழுத்தில் உதிரஞ் சொரிய புரண்டுகிடந்தான். மனைவி போய்ப் பார்க்க, பேனாகத்தியால் கழுத்தையறுத்துக் கொண்டிருக்கக் கண்டாள். ஆனால் காயம் பலமாயிருக்கவில்லை. உடனே வைத்தியர் வந்து காயத்தைக் கட்டினார். அவன் பூராவாகக் குடித்து, குடமயக்கத்தால் அப்படி செய்தபடியால், சாராயக் கடைக்காரர் இனியவனுக்குச் சாராயம் விற்கப்படாதென அதிகாரிகள் திட்டஞ்செய்தார்கள்.

கிரேட் பிரிட்டனில் வறுமை:—சென்ற செப்டம்பரில் கணிக்கப்பட்டபடி இங்கிலண்டிலும் வேல்ஸிலும் தரும சகாயம் பெற்று ஜீவிக்கும் தரித்திரர் தொகை 781,453. இது ஜனத்தொகையில் 1000-க்கு 22 விதமாகிறது. லண்டனில் மட்டுமுள்ள தரித்திரர் 118,701. இது 1000க்கு 24½ விதமாகிறது. முந்தின வருஷத்தொகையினும் இது குறைவுதான். இந்த தரித்திரத்துக்குக் காரணம் குடியென்பது சொல்லாமலே விளங்கும்.

திராவிட தமிழ்ப் பஞ்சாங்கம்:—இராமநாதபுரம் S.P.G. இன்டெஸ்டரியல் அச்சியந்திரசாலையில் அச்சியற்றப் பெற்ற 1910-ம் வருஷத்துத் தமிழ்ப் பஞ்சாகப் புஸ்தகமொன்று எமக்கனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்காக வந்தனஞ்செலுத்துகிறோம். புஸ்தகம் வெகு நேர்த்தியாய் அச்சியற்றிக்கட்டப்பட்டிருக்கிறது. அநேக முக்கிய சம்பவங்கள் எழுதப்பட்டுப் பிரதி நாளுக்குமுரிய குறிப்புகளுக்கு இடம் விடப்பட்டிருக்கிறது. கைக்கடக்கமான இந்தப் பாக்கெட் டையரி அநேகருக்குப் பிரயோஜனமாயிருக்குமென்றெண்ணுகிறோம். விலை அணா 3.

கனவினால் உயிர்தப்பினது:—சில நாட்களுக்கு முன்னர் சிங்கப்பூருக்கு 30 மைலி தூரத்தில் "லாசேய்னி" என்கிற பிரஞ்சு மேய்ல் ஸ்டீமர் இன்னொரு கப்பலோடு மோதியுடைந்து முழுகிப்போனது. அதிலேயிருந்த பிரயாணிகள் 90 பேர் மாண்டுபோனார்கள். மிஸ்டர் ரொட்ரிக்ஸ் என்பவரும் அவர் மக்கள் இருவரும் அந்த விபத்திலே யகப்பட்டு மாண்டு போயினரெனக் கருதப்பட்டது. ஆனால், இரண்டொரு நாளைக்கு முன் அவர்கள் மூவரும் பட்டேவியாவிலிருந்து ஒரு டச் மேய்ல் ஸ்டீமரேறி சிங்கப்பூர்வந்து சேர்ந்தார்கள். அவர்கள் மேற்படி விபத்தினின்று எப்படி உயிர்தப்பினார்களென்றால், அந்த ஸ்டீமர் புறப்படுந்தினத்துக்கு முந்தினராத்திரி மிஸ்டர் ரொட்ரிக்ஸ் கனவில் இறந்துபோன அவர் மனைவி வந்து, "நீரும் என்குமாரத்திகளும் அந்த ஸ்டீமரிலேறிப் போகவேண்டாம்; நீர்பாஸ் வாங்கி விட்டேனென்று பிடிவாதமாய்ப் போகிறேனென்று நிற்பீ

ரானல், என்மக்களையாவது உம்மோடு அழைத்துப் போகாதிரும்'' என்று சொல்லிப்போனுளாம் அதன்மேல் ஏற்கனவே தனக்கும், குமாரத்திகளுக்கும் இரண்டு வேலைக் காரருக்கும் பாஸ் வாங்கியிருந்த அவர் பிரயாணத்தை நிறுத்திவிட, அவர்கள் அந்த ஆபத்தினின்று காப்பாற்றப்பட்டார்களென்று சொல்லப்படுகிறது. நம்மைவிட்டுப் பிரிந்துபோனவர்களுக்கும் நமக்கும் சம்பந்த முண்டென்று இதனாலேற்படுகிறது.

கலியாணமும் ஒயினும்:—(ஒருவரெழுதுகிறார்.) 1910-ம் வருஷம் ஜனுவரி மீ 17வ காலை சென்னையில் நடந்த ஒரு சுதேசகிறிஸ்தவ கலியாணத்துக்குப் போயிருந்தேன். கலியாணவீட்டார் ஏழைகளேயன்றிப் பணக்காரரல்ல. அப்படியிருந்தும், அழைக்கப்பட்டவர்களுக்கு கேக்கும் ஒயினும் பரிமாறப்பட்டது. என்னபரிதாபம்! உண்டானவர்களெல்லாரும் இக்காலத்தில் ஒயின் என்கிற சாராயத்தைப் பகிரங்கமாய்ப்பரிமாற அஞ்சி அவ்வழக்கத்தை விட்டுக்கொண்டுவர, ஏழைகளாயுள்ளவர்கள் ஏனிந்த துர்வழக்கத்தைக் கையாடுகிறார்களோ தெரியவில்லை சில சுதேசக் கிறிஸ்தவர்களுக்குள்ளே யிருக்கிற இந்தத் துர்ப்பழக்கம் சீக்கிரம் ஒழிந்து போகுமென்று நம்புகிறேன். இவர்கள் தங்களுடைய தூதனை வாசித்தால் நற்புத்தியடையக் கூடும்.

மதராஸ் ரேயில்வேயில் உயிர்ச்சேதம்: வடக்கு இருப்புப் பாதையில் வால்டேருக்கும் துவ்வாடா ஸ்டேனுக்கும் இடையில் 66-நம்பர் எக்ஸ்பிரஸ் வண்டியினால் 6-ந் தேதி வியாழக்கிழமை அறைபட்டு உயிர் துறந்த ஜனங்கள் மொத்தம் 13. இதில் நான்கு புருஷர்களும நான்கு குழந்தைகளும் ஐந்து ஸ்திரீகளும் எனத் தெரிகிறது. இவர்கள் இருப்புப்பாதையைக் கடக்கும் போது வண்டிவந்துவிட நசுங்குண்டிறந்ததாகச் சொல்லப்படுகிறது.

நமது பத்திரிகை:—ஆங்கிலோ இந்திய மதுவிலக்குச் சங்கத்துப் பத்திரிகையாகிய (லண்டனில் பிரசுரமாகும்) "அப்காரி" என்னும் நமது சகோதரப்பத்திரிகை, நமது பத்திரிகையாகிய மதுவிலக்குத் தூதனுக்கு உபசரிப்பு கூறி வாழ்த்துதல் செய்கிறது. மிஸ்டர் T. மானியல் அவர்களின் பெருமுயற்சியால், திறமையுள்ள பத்திராசிரியர் பொறுப்பேற்று முன்வந்த பத்திரிகை நீடூழிவாழ்க வென்றெழுதுகிறது.

இந்திய மிஷனேரி. சங்கக் கூட்டங்கள்:—ஜனவரிமீ 25உயிலிருந்து நான்கு தினங்கள் இந்திய நாஷனல் மிஷனெரி சங்கக்கூட்டங்கள் சென்னை மெமோரியல் ஹாலில் நடந்தேறின. ஆரம்பதினத்தில்சர்ச் மிஷனெரி சங்கத்துக்குக் காரியதரிசியும், தற்காலம் சென்னையில் விஜயஞ்செய்திருப்பவருமான சங்கைப் பொருந்திய கிங்காம் அதிய க்ஷரவர்கள், கீழ்நாட்டில் தற்காலம் உண்டாயிருக்கிற சுதேசிய கிளர்ச்சியைப்பற்றிப் பேசி இக்கூட்டங்களை ஆரம்பித்தார். அத்தியக்ஷரவர்கள் இந்த முயற்சியைச் சிலாக்கித்துப் பேசி, வெகு சீக்கிரத்தில் இந்தியா இந்திய கிறிஸ்தவர்களாலேயே கிறிஸ்துவின் திருவடிசேரவேண்டு மென்றுரைசித்து, கூடியிருந்த கிறிஸ்தவ சகோதரர்களைப்பார்த்து நீங்களெல்லாரும் இதற்காக உழைக்கவேண்டு மென்றுற்சாகிப்பித்துப் பேசினார். அவருக்குப்பின் உபந்நியாசித்த கனம் கிங்ஸ்பரிபோதகர் சுதேசிய கிளர்ச்சியும் சுதேச கிறிஸ்தவர்களும் என்கிற விஷயத்தைப் பற்றி வெகு உற்சாகங்காட்டிப் பேசினார். சுதேசிய கிளர்ச்சி இந்தியாவுக்கு அங்கிலேயரால் வந்த புதியகிளர்ச்சி யென்றும், அதில் கிறிஸ்தவர்கள் சேராமல் விலகியிருப்பது தகுதியல்லவென்றும், மற்ற இந்தியரோடு இந்திய கிறிஸ்தவர்களும் சேர்ந்து தேச நன்மைக்காகப் பாடுபடவேண்டு மென்றும், இத்தேசத்தாருக்கு வேண்டிய சரீரநன்மை ஆத்தும நன்மையிவைகளுக்காகவெல்லாம் சுதேசகிறிஸ்தவர் கிறிஸ்துவின் ஆவியோடு தங்களாலானதைச் செய்யவேண்டு மென்றும் வற்புறுத்திப் பேசினார். மறு நாட்கள் கூட்டங்கள் சிறப்பாய் நடந்தேறி முடிந்தன.

ஒரு மகாராஜாவின் நன்கொடை:—ஹிஸ் ஹைனஸ் உதயபுரி மகாராண அவர்கள், ஆங்கிலோ இந்திய மதுவிலக்கு சங்கத்தாரின் நன்முயற்சியை மிகவும் சிலாகித்து, அச்சங்கத்தார் செலவுக்காக 10 பவுன் நன்கொடை யனுப்பிவைத்தார். பம்பாயிலுள்ள கனம்பொருந்திய ரத்ந டாடா என்கிற கனவான் 25 பவுண் அனுப்பிவைத்திருக்கிறார். இவ்விதம் தேசமன்னரும், கனவான்களானபிரஜைகளும் இந்த நன்முயற்சிக்காக அனுதாபப்படுவார்களாயின் இந்த வேலை வெகுதீவிரமாய் நடந்தேறத்தடையில்லை.